# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# கமலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## சுழல் தேர்வு – II

நேரம் : 3.00 மணி **12–ம் வகுப்பு 'ஆ' உயிர் – தாவரவியல்** மதிப்பெண்கள் : 70

**I. அனைத்து வினாவிற்கும் விடையளி:** **15 x 1 = 15**

1. வரிசை ஒன்றை (1) வரிசை இரண்டுடன் (2) பொருத்து

| வரிசை 1 | வரிசை 2 |
|---|---|
| 1. வில்லியம் எஸ்காட் | - (i) கல்பின வீரியம் |
| 2. ஷல் | - (ii) சடுதி மாற்ற பயர்ப்பொருக்கம் |
| 3. காட்டன் மேதர் | - (iii) பசுமைப் புரட்சி |
| 4. முல்லர் மற்றும் ஸ்டேட்லர் | - (iv) இயற்கை கலப்பினமாதல் |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iii) | (i) | (iv) | (ii) |
| இ) | (iv) | (ii) | (i) | (iii) |
| ஈ) | (ii) | (iv) | (iii) | (i) |

2. கூற்று : மஞ்சள் பல்வேறு புற்று நோய்களை எதிர்க்கிறது.

   காரணம் : மஞ்சளில் குர்குமின் என்ற ஆண்டி ஆக்ஸிடெண்ட் உள்ளது.

   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் தவறு

   இ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. தவறான இணையை கண்டறிக.

   அ) யூரிஃபாஜிக் – தண்ணீர்

   ஆ) யூரிபேதிக் – நீர் வாழ் இடத்தின் ஆழம்

   இ) யூரிசியஸ் – வாழிடத் தேர்வு

   ஈ) யூரிஹாலைன் – உப்புத்தன்மை

4. பொருந்தாத இணை எது?

   அ) மிதக்கும் நீர்வாழ் தாவரம் – பிஸ்டியா

   ஆ) வேரூன்றி மிதக்கும் நீர்வாழ் தாவரம் – மார்சீலியா

   இ) நீருள் மூழ்கி மிதக்கும் நீர்வாழ்தாவரம் – வாலிஸ்நேரியா

   ஈ) நீருள் மூழ்கி வேரூன்றிய நீர் வாழ் தாவரம் – ஹைட்ரில்லா

5. பொருத்துக.

   A. பயோசிஸ்டம் - (i) வொர்னாட்ஸ்கி

   B. பையோசீனோசிஸ் - (ii) தியென்மான்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

C. பயோனனர்ட்பாடி - (iii) கார்ல் மோபியஸ்

D. ஹோலோசீன் - (iv) ஃபிரட்ரிகஸ்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | (ii) | (iii) | (i) | (iv) |
| ஆ) | (i) | (ii) | (iii) | (iv) |
| இ) | (iii) | (ii) | (i) | (iv) |
| ஈ) | (iv) | (i) | (iii) | (ii) |

6. கூற்று : CDM திட்டத்தில் குறிப்பிடத்தக்க செயலுக்குளடுத்துக்காட்டாகச் சூரிய ஒளியிலிருந்து அல்லது வலிமையான கொதிகலன்களிலிருந்தம் மின்சாரம் தயாரிக்கப்படுவதைக் குறிப்பிடலாம்.

காரணம் : இவை மரபுசார் மின்சார உற்பத்திக்கு மாற்றாக அமைவதில்லை.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் தவறு

இ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

7. NPP = __________ - சுவாச இழுப்பு.

அ) NPP ஆ) GPP இ) GSP ஈ) NSP

8. பொருத்துக.

| | பொதுப் பெயர் | | குடும்பம் |
|---|---|---|---|
| A. | குப்பைமேனி | - (i) | லேமியேசி |
| B. | வில்வம் | - (ii) | ரூட்டேசி |
| C. | பிரண்டை | - (iii) | யூஃபோர்பியேசி |
| D. | துளசி | - (iv) | வைட்டேசி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | (ii) | (iii) | (iv) | (i) |
| ஆ) | (i) | (iv) | (iii) | (ii) |
| இ) | (ii) | (iii) | (i) | (iv) |
| ஈ) | (iii) | (ii) | (iv) | (i) |

9. லாசோனியா இனெர்மிஸ் பற்றிய சரியான கூற்றை தெரிவு செய்க.

(i) இத்தாவரம் ஃபேபேசி குடும்பத்தை சார்ந்து.

(ii) இவற்றில் வேர்களில் இருந்து 'ஹென்னா' என்ற ஆரஞ்சு சாயம் பெறப்படுகிறது.

(iii) இலைகளின் முக்கிய சாயப்பொருளாக லாகோசோன் பெறப்படுகிறது.

(iv) இது வட ஆப்பிரிக்கா மற்றும் தென்மேற்கு ஆசியாவைச் சேர்ந்தது.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

அ) (i) மற்றும் (ii) மட்டும் சரி ஆ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி

இ) (ii), (iii) மற்றும் (iv) சரி ஈ) (i), (ii) மற்றும் (iv) சரி

10. 'கொழிஞ்சி' இருசொற்பெயர் அறிக.

அ) கேசியா ஃபிஸ்டுலா ஆ) டேலோனிக்ஸ் ரீஜியா

இ) க்ரோடலேரியா ஜன்சியே ஈ) டெஃப்ரோசியா பெர்பியூரியா

11. பொருத்துக.

| | தாவரங்கள் | குறிகாட்டுவது |
|---|---|---|
| A. | பெட்டூனியா | - (i) சல்ஃபர்-டை-ஆக்ஸைடு |
| B. | ஃபைகஸ் | - (ii) நைட்ரேட் |
| C. | க்ளோடியோலஸ் | - (iii) ஃபளுரைட் |
| D. | ரொபீனியா | - (iv) கன உலோகங்கள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| இ) | (ii) | (iii) | (iv) | (i) |
| ஈ) | (ii) | (i) | (ii) | (iv) |

12. வனச் சூழல்மண்டலத்தின் எண்ணிக்கை பிரமிட் அடிப்படையில் தவறான இணையை கண்டறிக.

அ) $T_1$ - பெரிய மரங்கள் ஆ) $T_2$ - பாம்பு

இ) $T_3$ - நரி ஈ) $T_4$ - சிங்கம்

13. கீழ்கண்டவற்றில் பயிர் பெருக்கம் மூலம் உருவாக்கப்பட்ட நோய் எதிர்க்கும் திறன் கொண்ட கோதுமை ரகத்தை கண்டறிக.

அ) பூசா கோமல் ஆ) பூசா சடபஹர்

இ) ஹிம்கிரி ஈ) பூசா சுவர்னியம்

14. காற்று விசை உணரும் செயல்முறைக்கு எடுத்துக்காட்டு.

அ) வெர்னோனியா ஆ) டெர்மினோலியா

இ) டிப்டிரோகார்பஸ் ஈ) அரிஸ்டோலோக்கியா

15. ஒட்டகப்பாதக்கொடி என்று அழைக்கப்படும் தாவரம் எது?

அ) பாஹினியா வாஹ்லி ஆ) ருயில்லியா

இ) எக்பெல்லியம் எலேட்டிரியா ஈ) கைரோகார்பஸ்

**II. எவையேனும் ஆறு வினாவிற்கு விடையளி: 6 x 2 = 12**

16. சூழ்நிலையியல் சமானங்கள் என்றால் என்ன?


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

17. ஆழ்மிகு மண்டலத்தின் உற்பத்தித்திறன் குறைவாக இருக்கும். ஏன்?
18. கார்பன் கவரப்படுதல் மற்றும் சேகரித்தல் என்றால் என்ன?
19. கலப்பின வீரியம் – குறிப்பு வரைக.
20. பொய் தானியம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
21. எந்த நறுமணப்பொருள் "இந்தியாவின் கருந்தங்கம்" என அழைக்கப்படுகிறது? அவற்றின் பயன்களை எழுதுக.
22. மெய்கலப்பின வீரியம் என்றால் என்ன?
23. சமூகத்திற்குச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டினால் ஏற்படும் பயன்கள் யாவை?
24. டாப்ஸன் அலகு என்றால் என்ன?

**III. எவையேனும் ஆறு வினாவிற்கு விடையளி: 6 x 3 = 18**

25. நறுமனத்தைலங்களில் மல்லிகை மற்றும் ரோஜாவின் பங்கினை தருக.
26. லைக்கன்கள் ஒரு கட்டாய ஒருங்குயிரிக்கு ஒரு சிறந்த எடுத்தக்காட்டு ஆகும். விளக்குக.
27. சூழல் மண்டலத்திலிருந்து அனைத்து உற்பத்தியாளர்களையும் நீக்கிவிட்டால் என்ன நடைபெறும்?
28. நீர் பற்றாக்குறை தீர்வை ஆலோசித்து அதன் நன்மைகளை விளக்குக.
29. ஐகோர்னியா கிராஸிபஸ் – பற்றி சிறு குறிப்பெழுதுக.
30. உயிரிமரக்கரிமம் பற்றி சுருக்கமாக எழுதுக.
31. கலப்புறுத்தலின் படிநிலைகளை எழுதுக.
32. பெப்பரோமியா சதைப்பற்றுள்ள இலையின் குறுக்குவெட்டுத் தோற்றம் படம் வரைந்து பாகம் குறி.
33. பாஸ்பரஸ் சுழற்சி – குறிப்பு வரைக.

**IV. அனைத்து வினாவிற்கும் விடையளி: 5 x 5 = 25**

34. நீர்த் தாவரத்தின் வகைகளை அதன் எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

**(அல்லது)**

சூழலியல் வழிமுறை வளர்ச்சியின் பண்புகளை எழுதுக.

35. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு பிரமிட் வரைந்து சுருக்கமாக விளக்குக.
உயிரினங்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது –
(பருந்து – 50, தாவரங்கள் – 1000இ முயல் மற்றும் எலி – 250 + 250இ பாம்பு மற்றும் ஓணான் – 100 + 50).

**(அல்லது)**

தெலை உணரி பற்றி சுருக்கமாக எழுதி அவற்றின் பயன்களை தருக.

36. மீண்டும் காடுகளை உருவாக்குவதால் ஏற்படும் விளைவுகள் யாவை மற்றும் வேளான் காடு வளர்ப்பின் நன்மைகளை எழுதுக.

**(அல்லது)**


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

பயிர் பெருக்கத்தின் குறிக்கோள்களை எழுதுக.

37. பயிர் பெருக்கத்தில் புதிய பண்புக் கூறுகளை உருவாக்கும் புதிய பயிர்பெருக்க தொழில்நுட்ப முறைகளைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

நார் தரும் தாவரங்களில் எவையேனும் ஒன்றினை பற்றி விரிவாக. எழுதவும்.

38. நறுமணப்பொருட்களின் அரசன், அரசி யாவை? அவற்றை விளக்கி அவற்றின் பயன்களையும் விளக்குக.

**(அல்லது)**

ஒட்டுண்ணி வாழ்க்கை எதிர்மறை இடைச்செயல்களை விவரி.



*Prepared by...*

Mr. **K.PARTHIPAN** M.Sc., B.Ed.,
P.G. Assistant in Botany,
Kamalammal Matric. Hr. Sec. School,
Gandhi Nagar, Thanipadi.
Cell : 8344420260



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com